# பத்திரிக்கை செய்தி

தமிழகத்தில் கொரோனா நோய் தொற்று காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை குறைக்கும் வகையில் பெறுந்தொற்று நேரத்தில் பொது மக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் ரூ.4153.39 கோடி செலவில் மே 2021 மாதத்தில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.2000/- நிவாரண தொகையினை முதல் தவணையாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 216085 குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக தலா ரூ.2000/- 15.05.2021 தேதி முதல் அரிசி பெறும் அனைத்து குடும்ப அட்டடைதாரர்களுக்கும் வழங்கப்பட இருப்பதால் அதனைப் பெறும் ஆர்வத்தில் குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் நியாய விலைக் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்க்க வேண்டும். நியாய விலைக் கடையில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 200 டோக்கன்கள் வீதம் வீடுதோறும் 10.05.2021 முதல் 12.05.2021 வரை 3 நாட்களுக்கு விற்பனையாளர்கள் சென்று டோக்கன்கள் வழங்குவார்கள். கொரோனா நிவாரண நிதி ரூ.2000/- பெறுவதற்கு வரும் குடும்ப அட்டைதாரர்கள் உரிய தேதியிலும் குறிப்பிட்ட நேரத்திலும் வந்து பெற்றுக் கொள்ள வேண்டும். கொரோனா வைரஸ் உதவித் தொகை முதல் தவணையினை பெற வரும் குடும்ப அட்டைதாரர்கள் முகக்கவசம் அணிந்து, 1 மீட்டர் தனிமனித இடைவெளி ( Social Distancing ) கடைப்பிடித்து நிவாரண நிதியினை பெற்றுக் கொள்ளலாம் என நீலகிரி மாவட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8/5/21